# திறந்த கேள்வி அறிவித்தல் - 2024/2025

## மஸ்கெலியா பிரதேச சபை – மஸ்கெலியா.

மஸ்கெலியா பிரதேச சபைக்குரித்தான வியாபார நிலையங்களில் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, மீன் விற்பனை பொதுமலசலகூடம் மற்றும் தற்காலிக கடையறைகள் மற்றும் சிவனொளிபாத பருவகாலத்தை முன்னிட்டு நல்லதண்ணியில் பொது வாகனத்தரிப்பிடம் நல்லதண்ணி தொடக்கம் சீத்தகங்குல வரையில் மலசலகூட சுத்திகரித்தல் சேவையினை 2024/2025 வருடத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அடிப்படையில் கேள்விகள் கோரப்படுகின்றன.

**கடையறை குத்தகை விபரம்**

| இல | குத்தகையில் விடப்படும் சேவைகள் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (ரூ.) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை (ரூ.) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 01. | மஸ்கெலியா மாட்டிறைச்சி கடை இல 09 | 4,840,000.00 | 200,000.00 | 15,000.00 |
| 02. | மஸ்கெலியா ஆட்டிறைச்சி கடை இல 08 | 336,000.00 | 50,000.00 | 7,500.00 |
| 03. | மஸ்கெலியா மீன் கடை இல 01 | 210,000.00 | 35,000.00 | 7,500.00 |
| 04. | மஸ்கெலியா மீன் கடை இல 02 | 210,000.00 | 35,000.00 | 7,500.00 |
| 05. | மஸ்கெலியா மீன் கடை இல 03 | 210,000.00 | 35,000.00 | 7,500.00 |
| 06. | சாமிமலை மீன் கடை இல 01 | 162,000.00 | 30000.00 | 7,500.00 |
| 07. | மஸ்கெலியா பொது மலசலகூடம் | 233,000.00 | 30,000.00 | 7.500.00 |
| 08. | சாமிமலை பொது மலசலகூடம் | 10,000.00 | 5000.00 | 1000.00 |

**தற்காலிக கடையறைகள் – நல்லதண்ணி முள்ளுகாமம் சந்தி, மஸ்கெலியா நகரம், காட்மோர் சந்தி**

| இல | குத்தகையில் விடப்படும் சேவைகள் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (ரூ.) (ஒரு மாதத்திற்கு) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு தொகை | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்ப கட்டணம் |
|---|---|---|---|---|
| 01. | நல்லதண்ணி முள்ளுகாமம் சந்தியில் தற்காலிக கடையறை - இல 09 | 5000.00 | 50,000.00 | 2000.00 |
| 02. | மஸ்கெலியா 04ஆம் வீதி கடையறை இல 02 | 5000.00 | 90,000.00 | 2000.00 |
| 03. | மஸ்கெலியா 04ஆம் வீதி கடையறை இல 03 | 5000.00 | 90,000.00 | 2000.00 |
| 04 | மஸ்கெலியா 04ஆம் வீதி கடையறை இல 04 | 5000.00 | 90,000.00 | 2000.00 |
| 05 | காட்மோர் சந்தி தற்காலிக கடையறை இல 08 | 5000.00 | 90,000.00 | 2000.00 |
| 06 | சாமிமலை தற்காலிக கடையறை இல 07 | 5000.00 | 90,000.00 | 2000.00 |

**நல்லதண்ணி பொது வாகனத்தரிப்பிடம் மற்றும் மலசலகூடத் தொகுதி**

| இல | குத்தகையில் விடப்படும் சேவைகள் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (ரூ.) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு தொகை | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்ப கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | நல்லதண்ணி பொது வாகனத் தரிப்பிடம் மற்றும் பொது மலசலகூடம் | 1,980,000.00 | 200,000.00 | 10,000.00 |

**நல்லதண்ணி – சிவனொளிபாதமலை வழி**

| இல | குத்தகையில் விடப்படும் சேவைகள் | ஆகக் குறைந்த கேள்வி தொகை (ரூ.) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு தொகை | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்ப கட்டணம் |
|---|---|---|---|---|
| 01. | மகரதொரண மலசலகூட தொகுதி | 1,078,000.00 | 50,000.00 | 7500.00 |
| 02. | கங்குலதென்ன மலசலகூட தொகுதி | 715,000.00 | 50,000.00 | 7500.00 |

**நிபந்தனைகள்**

கேள்வி விண்ணப்பங்களை **2024.11.13** ம் திகதி மு.ப. **9.00** மணி முதல் **2024.11.26** ம் திகதி **பி.ப.04.00** மணி வரை அரச வேலை நாட்களில் மஸ்கெலியா பிரதேச சபையின் பிரதான காரியாலயத்தில் குறித்த தொகையினை செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

டென்டர் மூல பிரதி, துணைப்பிரதி என தனித்தனியாக குறிப்பிடப்படுவதோடு கேள்வி பத்திரங்கள் முன்வைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ……………… சேவை/ வியாபாரம் என தனித்தனியாக தெளிவாக குறிப்பிட வேண்டும்.

அனைத்து கேள்வி விண்ணப்பங்களும் "செயலாளர், மஸ்கெலியா பிரதேச சபை, மஸ்கெலியா " எனும் முகவரிக்கு **2024.11.27** ஆம் திகதி மு.ப. **10.00** மணிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் இடல் வேண்டும். அன்றைய தினம் மு.ப. **10.30** மணிக்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன் அதன் போது கேள்விதாரர் அல்லது அவர் சார்பாக பிரதிநிதி ஒருவர் வருகை தரல் அவசியமாகும். பிரதிநிதி ஒருவர் வருகைதருமிடத்து அவர் கேள்விதாரரிடம் இருந்து கடிதமொன்றை பெற்றுவரல் வேண்டும்.

குறிப்பிட்ட நேரத்திற்கு பின்னர் முன்வைக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்டதும் கேள்விதாரர் சபையுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடல் வேண்டும்.
ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களுக்காக கேள்விகளை முன்வைக்க முடியும். கேள்வி குழுவின் தீர்மானம் இறுதி தீர்மானம் என்பதுடன், மேலதிக தகவல்களை காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

1. குத்தகை காலமானது 2025.01.01 தொடக்கம் 2025.12.31 வரையானதாகும்.
2. மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி என்பவற்றை மஸ்கெலியா பிரதேச சபையின் இறைச்சி வெட்டுமிடத்தில் மாத்திரமே வெட்டுதல் வேண்டும்.
3. 2024.11.27 அன்று மு.ப 10.30 மணிக்கு P.M.D விழா மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும்.
4. மஸ்கெலியா மற்றும் சாமிமலை நகர குத்தகைக்கு கேள்வித் தொகையில் 40% அவ்வேளையிலேயே செலுத்தப்படவேண்டியதுடன் மிகுதி தொகைக்காக பிணை முன்வைக்கப்படல் வேண்டும்.
5. நல்லதண்ணி நகரின் டென்டரில் கேள்வித்தொகையில் 50% அவ்வேளையிலேயே செலுத்தப்படவேண்டியதுடன் மிகுதி தொகைக்காக பிணை முன்வைக்கப்படல் வேண்டும்.
6. தற்காலிக கடையறைக்காக அதிகபட்ச கேள்வித்தொகையினை விண்ணப்பிப்பவர்க்கே டென்டர் வழங்கப்படும் என்பதுடன் நல்லதண்ணி முள்ளுகாமம் சந்தி தற்காலிக கடையறைக்கு மீளளிக்கப்பட வேண்டிய வைப்புத்தொகை சிவனொளிபாதமலை பருவகாலம் முடிந்தவுடன் செலுத்தப்படும்.
7. மஸ்கெலியா தற்காலிக கடையறைகள் மற்றும் காட்மோர் சந்தி கடையறை ஆகியவற்றிற்கான குத்தகை காலம் 05 வருடங்கள் ஆவதோடு மீளளிக்கப்பட வேண்டிய வைப்புத்தொகை குத்தகை காலம் நிறைவடைந்தவுடன் செலுத்தப்படும்.
8. குத்தகைதாரர் டென்டரிலிருந்து விலகும் பட்சத்தில் டென்டர் மீளளிக்கப்படும் வைப்புப்பணமானது மீளச்செலுத்தப்பட மாட்டாது அத்துடன் அவரின் பெயர் குற்றப்பதிவு ஆவணத்தில் உள்ளடக்கப்படும்.
9. டென்டர் தொகைக்கு மேலதிகமாக அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1% முத்திரை வரியினை கட்டாயமாக செலுத்துதல் வேண்டும். (அரசின் கொள்கைக்கு அமைய இவ்வரி வீதங்கள் மாறுபட முடியும்).
10. சிவனொளிபாதமலை பருவகால ஒப்பந்த காலம் 2024.12.14 முதல் 2025.05.12 வரையாகும்.
11. நல்லதண்ணி நகரத்தில் மலசலகூடத் தொகுதி சுத்தம் செய்தல் மற்றும் வாகனங்களை நிர்வகித்தல் போன்றவற்றிற்கு ஊழியர்களை நியமித்தல் குத்தகைதாரர்களினாலே மேற்கொள்ள வேண்டும்.
12. கடந்த ஆண்டின் குத்தகைதாரர்களின் நிலுவைகள் செலுத்தப்படாதிருப்பின் அவற்றை செலுத்திய பின்னரே கேள்வி விண்ணப்பம் விநியோகிக்கப்படும்.
13. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரரினால் கேள்வி விதிகள் மீறப்பட்டிருக்குமாயின் அவர்களின் வைப்புப்பணம் சபைக்கு உட்படுத்தப்படுவதுடன் கேள்வி தொடர்பாக குற்றம் இழைத்தவராக கருதி குற்றப்பதிவு ஆவணத்தில் பெயர் உள்ளடக்கப்படும்.
14. குத்தகை வழங்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் நீர் மற்றும் மின்சார கட்டணங்களை குத்தகையாளரே செலுத்துதல் வேண்டும்.
15. நல்லதண்ணி நகரத்தில் மலசலகூடத் தொகுதி மற்றும் வாகனத்தரிப்பிடம் பெற்றுக்கொண்ட கேள்விதாரர்களின் மீள செலுத்தவேண்டிய வைப்புப்பணம் சிவனொளிபாதமலை பருவ காலம் முடிந்ததும் மீள செலுத்தப்படும்.
16. மலசலகூட கழிவுகள் ஒப்பந்ததாரரினாலேயே அகற்றப்பட வேண்டியதோடு மலசலகூட சுற்று சூழலை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும், பொது சுகாதார பரிசோதகர் மற்றும் மஸ்கெலியா பிரதேச சபையின் செயலாளரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள மஸ்கெலியா பிரதேச சபையின் உத்தியோகத்தரின் வழிக்காட்டலுக்கமைவாக மலசலகூடங்களை பேணல் வேண்டும்.
17. கேள்விகள் திறக்கப்பட்டதனை தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட குத்தகைதாரர் அவ்வேளையிலேயே பிரதேச சபையுடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டியதினால் கேள்விக்கான முத்திரை கட்டணம், சட்டத்தரணி கட்டணம் என்பவற்றை இத்தினத்தில் எடுத்து வரல் வேண்டும்.
18. குத்தகைதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை மற்றும் கிராம அலுவலர் சான்றிதழ் என்பன முன்வைக்கப்படல் வேண்டும். (கேள்வி விண்ணப்பங்களுடன்)
19. கேள்விக்குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

செயலாளர்,
மஸ்கெலியா பிரதேச சபை,
மஸ்கெலியா.

மேலதிக தகவல்களுக்கு – 052-2277275 2024.11.12